# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No.105/2012 |
| Deposition of witness for Prosecution | : P.w.7/L.W.12 |
| Name | : ராமகிருஷ்ணன் |
| Father Name/Husband Name | : ராஜகோபால் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 29.07.2025 நாளாகிய இன்று திரு.R.Buvaneshkumar, B.A, L.L.B(Hons), L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(எதிரிகள் 2,3 ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டது)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் நத்தவெளியில் வசித்து டெய்லராக வேலை செய்து வருகிறேன். 1, 2 எதிரிகளை தெரியும். பழனியப்பன் மளிகை கடை வைத்திருந்தபோது எனக்கு பழக்கம் கடந்த 2008 ல் பழனியப்பன் என்பவரிடம் மாதம் ரூ.4000 என 16 மாதங்களுக்கு ரூ.65000/-த்தை கட்டியிருந்தேன். நான் சீட்டு பணத்தை 20 மாதங்கள் கழித்து எடுத்துக்கொள்ளலாம் என நினைத்தபோது அவரை காணவில்லை. பின்னர் இவ்வழக்கின் மனுதாரர் மணிமாறன் என்னை போலவே சீட்டு கட்டி ஏமாந்திருந்தால் அவருடன் சேர்ந்து நானும் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் தெரிவித்தோம். நானும் சீட்டு கட்டியிருந்ததால் என்னையும் விசாரித்தார்கள். நான் விவரத்தை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

நான் சீட்டு கட்டியதற்கு ஏதாவது அடையாள அட்டை வைத்துள்ளேனா என்றால் இல்லை. யாருக்கும் தரவில்லை. பணம் கட்யதற்கான பாஸ்புக் ஏதும் கொடுக்கவில்லை. மாதம் மாதம் பணம் கட்டியதற்கான ரசீது ஏதும் இல்லை. நான் சீட்டு கட்டியதற்கு தனிப்பட்ட முறையில் கணக்கு ஏதும் எழுதிவைக்கவில்லை. நான் 1ம் எதிரியிடம் தான் மாதம் மாதம் பணம் கட்டி வந்தேன். 1வது எதிரியே நேரடியாக வந்து பணம் வாங்கி செல்வார். 1ம் எதிரி காணாமல் போன விவரம் மணிமாறன் என்பவர் சொல்லிதான் தெரியும். திருப்பாபுலியூர் காவல் நிலைய எல்லையில் நான் வசித்து வருகிறேன். நான் 1 வது எதிரி ஓடிவிட்டபிறகு புகார் ஏதும் கொடுக்கவில்லை. நான் சொல்வது போல் சீட்டு பணம் கட்டவில்லை என்றாலும் அதனால் தான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. மாதம் சீட்டு ஏலத்திற்கு நான் செல்லாத காரணத்தினால் ஏலம் யார் விடுகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சீட்டு கட்டவில்லை என்று சொன்னாலும், பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சீட்டு பணம் கடைசி மாதத்தில் எடுத்துகொள்ளலாம் என்று நினைத்ததால் ஏலத்தில் சரிவர கலந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். சீட்டு பணம் கட்டி நிறைய பேர் ஏமாந்திருந்தால் அனைவரும் சேர்ந்து புகார்கொடுத்தோம் அதனால் தான் தனியா புகார் ஏதும் கொடுக்கவில்லை.

BUVANESHKUMAR
Digitally signed by BUVANESHKUMAR
Date: 2025.07.29 17:17:29 -0500

நீதித்துறை நடுவர் எண்-2,

கடலூர்.